

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், செதில்பாக்கம் ஊராட்சியில் மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் பார்வையிட்டு துறை அதிகாரிகளிடம் இணைந்து பயனாளிகளுக்கு மருத்துவ சேவை வழங்குமாறு தலைமை செயற்குழு உறுப்பினர், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் வேண்டுகோள் விடுத்தார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், எம்.கேசவன், எம்.முனிவேல், சீனிவாசன், உதயகாந்தம்மாள், லாரன்ஸ், அமுல்ராஜ், அமரம்பேடு முத்து, போந்தவாக்கம் ரவி, சுப்பிரமணி, காமராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இரண்டாவது மாதமாக 27ஆம் தேதி 200 மூத்த முன்னோடிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மகளிருக்கு தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை மாத்தூரில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி வழங்கினார். 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்பில்,மிசா மதிவாணன் ,ஆர். டி.மதன்குமார்,கே. அங்குசாமி, கே. கருணாகரன், வி.ஆர், குப்பன்,ஆர்.பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில்

# தாம்பரம் மாநகராட்சி, 2வது மண்டலக் கூட்டம்!

## குரோம்பேட்டை ராதா நகர் ரயில்வே சுரங்கப்பாதை திறப்புக்கு நன்றி தெரிவித்து சிறப்பு தீர்மானம்!

பல்லாவரம் ஜன. 30-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி 2வது மண்டலம்(பல்லாவரம்) மாமன்ற உறுப்பினர் கூட்டம் 28.1.2026 அன்று காலை 10.30 மணி அளவில் குரோம்பேட்டையில் உள்ள மண்டல அலுவலக கூட்ட அரங்கில் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் உதவி ஆணையர் செந்தில் குமார் முன்னிலையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் லதா சிவக்குமார் ரேணுகா தேவி பரமசிவம் மங்கையர் திலகம் ராஜ்குமார் டி. வி. ராஜா எஸ். நெடுஞ்செழ யன் பிரேமலதா பண்டரிநாதன் பிருந்தா தேவி சிலம்பரசன் சே. முத்துக்குமார் கலைச்செல்வி வெங்கடேசன் கீதா நாகராஜன் புசிரா பானு நாசர் மகேஸ்வரி கார்த்திகேயன் கு விஜய லட்சுமி ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்று தங்கள் வார்டுகளில் உள்ள பிரச்சனைகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து உரையாற்றினார்கள் .

அதைத்தொடர்ந்து மண்டல தலைவர் ஜோசப் அண்ணாதுரை குரோம்பேட்டை ராதா நகர் ரயில்வே சுரங்கப்பாதை அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களில் 35 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றி சுரங்கப்பாதை அமைத்துத் தந்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்ததற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் சுரங்கப் பாதையை திறந்து வைத்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் துறை அமைச்சர் மாண்புமிகு ஏ.வ. வேலு அவர்களுக்கும் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும் திருமிகு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ கருணாநிதி எம்எல்ஏ அவர்களுக்கும் நன்றி தெரிவித்து சிறப்பு தீர்மானத்தை மண்டல தலைவர் அவர்கள் கொண்டு வந்தார்.

அதைத்தொடர்ந்து மாமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் அளித்தும் திட்டங்கள் குறித்தும் சிறப்புரை ஆற்றினார் அப்போது கூறியதாவது 2வது மண்டலத்தில் சாலை பணிகளை மேற்கொள்ள, 16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது மாமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்ட தெருகளுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

தொடர்ந்து, கண்ட இடத்தில் குப்பை கொட்டுவதை தடுக்க, ரயில்வே ஸ்டேஷன் அணுகு சாலை, பாரதி நகர் மின்மாற்றி, பாரதி நகர் போலீஸ் பூத், மலைமகள் தெரு, ஈச்சங்காடு அணுகு சாலை, ராதா நகர் மெயின்ரோடு-பாஷ்யம் தெரு சந்திப்பு, ஏழுமலை நகர் உள்ளிட்ட 12 இடங்களில், கண்காணிப்பு கேமரா மற்றும் வேலி அமைப்பது மற்றும் சிறுபாலம், மழைநீர் கால்வாய், மின் விளக்கு, குடிநீர் வசதி உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள ரூபாய் 3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இவ் பணிகள் மிக விரைவில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார் அதைத் தொடர்ந்து 33 தீர்மானங்கள்நிறைவேற்றப் பட்டன உதவி செயற் பொறியாளர் சங்கர் உதவி பொறியாளர் சுகாதார அலுவலர் உள்ளிட்ட மாநகராட்சி அதிகாரிகள் பங்கேற்றார்கள்.



சென்னை தெற்கு மாவட்டம், 175 வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.திவாகர் பவித்ரா ஆகியாரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு வேளச்சேரி மேற்கு பகுதி துணை அமைப்பாளர் எஸ்.நஜிம் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.உடன் எம்.அப்துல் ரஹ்மான்,ஹாஜிரா, பாத்திமா, என்.அஜிஸ்சுல் ஆபிர்,வேளச்சேரி சிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### புழல் எம்.நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## கழக முன்னோடிகளுக்கு நலஉதவிகள் கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்கினார்!

மாதவரம், ஜன. 30-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 19வது வட்டம் மாத்தூர் எம் எம் டி ஏ முதல் பிரதான சாலை அருகே நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு 19வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்றார். வட்ட செயலாளர்கள் கே. அங்குசாமி, கே. கருணாகரன், வி ஆர். குப்பன் ஆகியோர் கூட்டத் தலைவரை முன்மொழிந்து வழிமொழிந்து பேசினார்கள்.

தலைமை செயற்குழு உறுப்பினர் மாதவரம் மிசா மதிவாணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், துணை அமைப்பாளர்கள் சி. எஸ். எஸ். டி. சீனிவாசன், கேபிள் த.வே. கணேசன், பகுதி கழக நிர்வாகிகள் வி. திராவிட வீரன், பி. நிர்மல் குமார், கே.ராஜா, மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி 2ஆம் மாதமாக மாதந்தோறும் 27ஆம் தேதி 200 மூத்த முன்னோடிகளுக்கு அரிசி மற்றும் மளிகை சாமான்கள் மற்றும் கழக மகளிர் அணியைச் சேர்ந்த இரண்டு பேருக்கு தையல் இயந்திரங்கள் ஆகியவற்றை நாடாளுமன்ற உறுப்பினர் கழக அயலக அணி தலைவர் மருத்துவர் கலாநிதி வீராசாமி வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து மகளிருக்கும் பகுதி கழகத்தின் சார்பில் இரவு விருந்து அளிக்கப்பட்டது.

மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார்,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே சண்முகப்ரியன்,எஸ் சிவகுமார், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் எம். அமுதா, ஜெ. யுவராணி, துரைசாமி துரை தசரதன்,பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் எஸ். சுகாசினி, டி.அமலா, ராஜேஸ்வரி, ஆர்.ஜெயபாரதி, அத்திக்குளம் தேவி, ஆர். சரஸ்வதி, பகுதி மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், சகிலா, பெரியநாயகி, கஸ்தூரி, சரஸ்வதி, பகுதி இளைஞரணி நிர்வாகிகள் எம். என்.அஜய் தென்னவன், வெ. சிவப்பிரகாஷ், கோ. ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், அ. சாந்தகுமார், ஆதிதிராவிட நலக்குழு தகுதி நிர்வாகிகள் எஸ். நாகராஜன், எஸ். புஷ்பராஜ், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஏ.தசரதன், பபின், எம். என்.தளபதி,சாய் சந்திப், துளசி,கதிரவன்,பிரபு,உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் இறுதியாக மாவட்ட வர்த்தக அணி தலைவர் ஆர். பாபு நன்றி கூறினார்.

நிகழ்ச்சி ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.


